மிரியாம் குஷ்டரோகியானது

(எண், 12:1-15 ; 26:59)

I. **மனப்பாட வசனம்:** (2 Marks)

எபிரெயர் 13:17

உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே.

II. **பொருத்துக:** (1 Mark)

1. மோசே	-	மிகுந்த சாந்தகுணமுள்ளவன்	(எண். 12:3)
2. மோசே	-	உண்மையுள்ளவன்	(எண். 12:7)
3. மோசே	-	கர்த்தரின் சாயல்	(எண். 12:8)
4. மோசே	-	கர்த்தருடைய தாசன்	(எண். 12:7,8)
5. மோசேயின் மனைவி	-	எத்தியோப்பிய ஸ்திரீ	(எண். 12:1)
6. மிரியாம்	-	மோசேயின் சகோதரி	(எண். 26:59)
7. மிரியாம்	-	ஆரோனின் சகோதரி	(எண். 26:59)
8. மிரியாம்	-	குஷ்டரோகி	(எண். 12:10)
9. கர்த்தர்	-	மேகத்தூண்	(எண். 12:5)

III. **கோடிட்ட இடங்களை நிரப்புக:** (1 Mark)

1. மிரியாம், _____ , _____ மூத்த சகோதரியாவாள்.
2. மோசே _____ தேசத்து ஸ்திரீயை விவாகம் பண்ணியிருந்தான்.
3. _____,_____ மோசேக்கு விரோதமாக பேசினார்கள்.
4. _____ பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணம் உள்ளவனாயிருந்தான்.
5. கர்த்தர் மேகத்தூணில் இறங்கி, _____ நின்று ஆரோனையும், மிரியாமையும் கூப்பிட்டார்.
6. என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல. என் வீட்டில் எங்கும் _____ .
7. கர்த்தர் மோசேயுடன் மறைமுகமாக அல்ல,_____ ,_____ பேசினார்.
8. மோசே கர்த்தரின் _____ காண்கிறான்.
9. _____உறைந்த மழையின் வெண்மை போன்ற குஷ்டரோகியானாள்.
10. மிரியாம் _____ பாளயத்துக்குப் புறம்பே விலக்கப்பட்டிருந்தாள்.

விடைகள்

1. ஆரோனுக்கும், மோசேக்கும்	(எண் 26:59)	6. உண்மையுள்ளவன்	(எண் 12:7)
2. எத்தியோப்பிய	(எண் 12:1)	7. முகமுகமாகவும், பிரத்தியட்சமாகவும்	(எண் 12:8)
3. மிரியாமும், ஆரோனும்	(எண் 12:1)	8. சாயலைக்	(எண் 12:8)
4. மோசே	(எண் 12:3)	9. மிரியாம்	(எண் 12:10)
5. கூடாரவாசலில்	(எண் 12:5)	10. ஏழுநாள்	(எண் 12:15)

IV. <u>சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுது</u>: (1 Mark)

1. மோசே எந்த தேசத்தின் ஸ்திரீயை விவாகம் பண்ணியிருந்தான்?

a. எகிப்து தேசத்து ஸ்திரீ b. கானான் தேசத்து ஸ்திரீ
c. எத்தியோப்பிய தேசத்து ஸ்திரீ d. சீரியா தேசத்து ஸ்திரீ

2. பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தவன் யார்?

a. மோசே b. யோபு c. எலியா d. யோவான்

3. மோசேக்கு விரோதமாய் பேசின விஷயத்தில் கர்த்தர் யாரை எல்லாம் ஆசரிப்புக்கூடாரத்துக்கு புறப்பட்டு வரும் படியாக அழைத்தார்?

a. மோசேயும், ஆரோனும் b. ஆரோனையும், மிரியாமையும்
c. மோசேயும், மிரியாமையும் d. மோசேயும், ஆரோனையும், மிரியாமையும்

4. கர்த்தர் யாரைக் குறித்து நற்சாட்சி கொடுத்தார்?

a. மிரியாமைக் குறித்து b. ஆரோனைக் குறித்து
c. சிம்சோனைக் குறித்து d. மோசேயைக் குறித்து

5. மிரியாமினிமித்தம் இஸ்ரவேலரின் பிரயாணம் எத்தனை நாட்கள் தடைப்பட்டது?

a. ஏழு நாட்கள் b. பத்து நாட்கள்
c. நாற்பது நாட்கள் d. ஐம்பது நாட்கள்

<u>விடைகள்</u>

1. c (எண். 12:1) 4. d (எண் 12:7,8)
2. a (எண் 12:3) 5. a (எண் 12:15)
3. d (எண் 12:4)

V. <u>யார், யாரிடம் கூறியது</u>: (2 Marks)

1. "கர்த்தர் மோசேயைக் கொண்டு மாத்திரம் பேசினாரோ எங்களைக் கொண்டும் அவர் பேசினதில்லையோ?" (எண் 12:2)

யார் : மிரியாமும், ஆரோனும்
யாரிடம் : தங்களுக்குள்

2. "என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன்". (எண் 12:7)

யார் : கர்த்தர்
யாரிடம் : ஆரோனிடமும், மிரியாமிடமும்

3. "ஆ. என் ஆண்டவனே. நாங்கள் புத்தியீனமாய்ச் செய்த இந்தப் பாவத்தை எங்கள் மேல் சுமத்தாதிரும்." (எண் 12:11)

யார் : ஆரோன்
யாரிடம் : மோசேயிடம்

4. "என் தேவனே, அவளைக் குணமாக்கும்." (எண் 12:13)

யார் : மோசே
யாரிடம் : கர்த்தரிடம்

5. "அவள் ஏழுநாள் வெட்கப்பட வேண்டாமோ?" (எண் 12:14)

யார் : கர்த்தர்
யாரிடம் : மோசேயிடம்

VI. <u>ஓரிரு வார்த்தைகளில் விடையளி</u>: (2 Marks)

1. ஆரோனும். மிரியாமும் யாருக்கு விரோதமாய் பேசினார்கள்? அதை கேட்டது யார்?

ஆரோனும், மிரியாமும் மோசேக்கு விரோதமாய் பேசினார்கள் கர்த்தர் அதைக் கேட்டார். (எண் 12:2)

2. தேவன் யார், யாரை ஆசரிப்புக் கூடாரத்திற்கு வரும்படி அழைத்தார்?

தேவன் ஆரோனையும், மிரியாமையும், மோசேயையும் ஆசரிப்புக் கூடாரத்திற்கு வரும்படி அழைத்தார். (எண்12:4)

3. மோசே சகல மனிதரிலும் எப்படிப்பட்டவனாயிருந்தான்? கர்த்தருடைய வீட்டில் எப்படிப்பட்டவனாயிருந்தான்?

மோசே சகல மனிதரிலும் மிகுந்த சாந்த குணமுள்ளவனாயிருந்தான் (எண் 12:3)
அவன் கர்த்தருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான் (எண் 12:7)

4. தீர்க்கதரிசிகளோடுகூட தாம் எப்படி பேசுவதாக கர்த்தர் ஆரோனிடமும், மிரியாமிடமும் கூறினார்?

தீர்க்கதரிசிகளுக்கு தரிசனத்தில் தன்னை வெளிப்படுத்தி, சொப்பனத்தின் மூலமாக அவர்களோடுகூட பேசுவதாக கூறினார். (எண் 12:6)

5. கர்த்தர் மோசேயோடு தாம் எப்படி பேசுவதாக கூறினார்?

கர்த்தர் மோசேயோடு முகமுகமாகவும், பிரத்தியட்சமாகவும் பேசுவதாக கூறினார். (எண் 12:8)

6. கர்த்தருடைய சாயலைக் கண்டது யார்? கர்த்தருடைய கோபம் யார் மேல் மூண்டது?

மோசே கர்த்தருடைய சாயலைக் கண்டான். (எண் 12:8)
ஆரோன், மிரியாம் மேல் கர்த்தருடைய கோபம் மூண்டது. (எண் 12:9)

7. கர்த்தருடைய கோபம் மிரியாமின் மேல் மூண்டபோது அவளுக்கு நேரிட்டது என்ன?

(அல்லது)

கர்த்தர் ஆசரிப்புக் கூடாரத்தை விட்டு போன பின்பு மிரியாமுக்கு சம்பவித்தது என்ன?

மிரியாம் உறைந்த மழையின் வெண்மை போன்ற குஷ்டரோகியானாள். (எண் 12:10)

8. மிரியாமுக்காக மோசேயிடம் பரிந்து பேசினது யார்? மிரியாமுக்காக கர்த்தரிடம் பரிந்து பேசினது யார்?

மிரியாமுக்காக மோசேயிடம் பரிந்து பேசினது ஆரோன். (எண் 12:12)
மிரியாமுக்காக கர்த்தரிடம் பரிந்து பேசினது மோசே. (எண் 12:13)

9. மிரியாம் தன் பாவத்தினிமித்தம் பாளயத்துக்கு புறம்பே எத்தனை நாள் விலக்கப்பட்டிருந்தாள்? அதினால் ஏற்பட்ட விளைவு என்ன?

மிரியாம் தன் பாவத்தினிமித்தம் பாளயத்துக்கு புறம்பே ஏழுநாட்கள் விலக்கப்பட்டிருந்தாள். அதினால், மிரியாம் சேர்த்துக் கொள்ளப்படும் ஏழு நாட்கள் மட்டும், இஸ்ரவேல் ஜனங்களுடைய பிரயாணம் தடைப்பட்டது. (எண் 12:15)

VII. <u>விரிவான விடையளி</u>: (4 Marks)

1. ஆரோனும், மிரியாமும் மோசேக்கு விரோதமாக பேசினது என்ன? ஏன் அவ்விதமாய் பேசினார்கள்?

i) *கர்த்தர் மோசேயைக் கொண்டு மாத்திரம் பேசினாரோ, எங்களைக் கொண்டும் அவர் பேசினதில்லையோ என்று ஆரோனும், மிரியாமும் மோசேக்கு விரோதமாக பேசினார்கள். (எண் 12:2)*

ii) *மிரியாமும் ஆரோனும் மோசே விவாகம் பண்ணின எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயினிமித்தம் அவனுக்கு விரோதமாகப் பேசினார்கள். (எண் 12:1)*

2. தேவன் மோசேயைப் பற்றி கொடுத்த நற்சாட்சி என்ன?

கர்த்தர் மோசேயை குறித்து ஆரோனிடமும் மிரியாமிடமும் கீழ்கண்டவாறு நற்சாட்சி கொடுத்தார்,

i. என் தாசனாகிய மோசேயோ என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன்

ii. பூமியிலுள்ள சகல மனிதரைப் பார்க்கிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவன்.

iii. நான் அவனுடன் முகமுகமாகவும், பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்.

iv. அவன் என் சாயலைக் காண்கிறான் என்றார். (எண் 12:3,7,8)

3. ஆரோன் மிரியாமிற்காக மோசேயிடம் எவ்வாறு பரிந்து பேசினான்?

ஆரோன் மோசேயிடம், ''ஆ, என் ஆண்டவனே, நாங்கள் புத்தியீனமாய்ச் செய்த இந்தப் பாவத்தை எங்கள் மேல் சுமத்தாதிரும். தன் தாயின் கர்ப்பத்தில் பாதி மாம்சம் அழுகிச்செத்து விழுந்த பிள்ளையைப்போல அவள் ஆகாதிருப்பாளாக'' என்று பரிந்து பேசினான். (எண் 12:11,12)

4. மோசே மிரியாமிற்காக கர்த்தரிடம் எவ்வாறு கெஞ்சினான்? கர்த்தர் கொடுத்த பதில் என்ன?

மோசே கர்த்தரிடம், ''என் தேவனே, அவளைக் குணமாக்கும்'' என்று மிரியாமுக்காக கெஞ்சினான். அதற்கு கர்த்தர், ''அவள் தகப்பன் அவள் முகத்திலே காறித் துப்பினதுண்டானால், அவள் ஏழுநாள் வெட்கப்பட வேண்டாமோ. அதுபோலவே அவள் ஏழுநாள் பாளயத்துக்குப் புறம்பே விலக்கப்பட்டிருந்து பின்பு சேர்த்துக் கொள்ளப்படக்கடவள்'' என்று பதிலளித்தார். (எண் 12:13,14)

VIII. <u>போதனை</u>: (2 Marks)

சபையை நடத்துகிறவர்கள் தேவனால் நியமிக்கப்பட்டவர்களாயிருக்கின்றனர். எனவே நாம் அவர்களுக்கு விரோதமாய்ப் பேசக்கூடாது.

****

வகுப்பு : 4

பாடம்-5

பிலேயாமும், அவனுடைய கழுதையும்

(எண், 22:1-35)

I. ***மனப்பாட வசனம்:*** (2 Marks)

1 யோவான் 2 : 15

உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள் ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.

II. ***பொருத்துக:*** (1 Mark)

1. *பிலேயாம்*	-	*தீர்க்கதரிசி*	*(பாடத்திட்டம்)*
2. *பிலேயாம்*	-	*பேயோரின் குமாரன்*	*(எண். 22:5)*
3. *பிலேயாம்*	-	*பெத்தூர்*	*(எண். 22:5)*
4. *பிலேயாம்*	-	*மாறுபாடான வழி*	*(எண். 22:32)*
5. *பிலேயாம்*	-	*பண ஆசை*	*(போதனை)*
6. *பாலாக்*	-	*சிப்போரின் குமாரன்*	*(எண். 22:4)*
7. *பாலாக்*	-	*மோவாபின் இராஜா*	*(எண். 22:4)*
8. *இஸ்ரவேலர்*	-	*பூமியின் விசாலத்தை மூடுகிற ஜனம்*	*(எண். 22:11)*
9. *கர்த்தருடைய தூதன்*	-	*உருவின பட்டயம்*	*(எண். 22:23)*
10. *கழுதை*	-	*தடி*	*(எண். 22:27)*
11. *கழுதை*	-	*பேசியது*	*(எண். 22:28)*

III. ***கோடிட்ட இடங்களை நிரப்புக:*** (1 Mark)

1. _____ *சமனான வெளிகளில் பாளயமிறங்கியிருந்த இஸ்ரவேலரைக் கண்டு, ராஜாவாகிய* _____ *பயந்தான்.*
2. *இஸ்ரவேலர்* _____ *செய்த யாவையும் பாலாக் கண்டான்.*
3. _____*குமாரனாகிய பாலாக் மோவாபியருக்கு ராஜாவாயிருந்தான்.*
4. *இஸ்ரவேலரை சபிக்கும்படி பாலாக் இராஜா* _____ *தீர்க்கதரிசியை அழைத்தான்.*
5. *மோவாபின் மூப்பரும்,* _____*குறி சொல்லுதலுக்குரிய கூலியை எடுத்துக்கொண்டு பிலேயாமிடத்திற்குப் போனார்கள்.*
6. *பிலேயாம்* _____ *சபிப்பதை தேவன் அனுமதிக்கவில்லை.*
7. _____*பிலேயாமின் கண்களைத் திறந்தார்.*
8. _____*வழி கர்த்தருக்கு மாறுபாடாயிருந்ததினால் கர்த்தருடைய தூதனானவர் அவனுக்கு* _____ *புறப்பட்டு வந்தார்.*

விடைகள்

1.	*மோவாபின், பாலாக்*	*(எண் 22:1,2)*	*5.*	*மீதியானின் மூப்பரும்*	*(எண் 22:7)*
2.	*எமோரியருக்குச்*	*(எண் 22:2)*	*6.*	*இஸ்ரவேலரை*	*(எண் 22:12)*
3.	*சிப்போரின்*	*(எண் 22:4)*	*7.*	*கர்த்தர்*	*(எண் 22:31)*
4.	*பிலேயாம்*	*(எண் 22:6,7)*	*8.*	*பிலேயாமின், எதிரியாக*	*(எண் 22:32)*

IV. <u>சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுது:</u> (1 Mark)

1. மாறுபாடான வழியில் நடந்த தீர்க்கதரிசி யார்?

   a. மோசே b. பிலேயாம் c. எலிசா d. ஆபகூக்

2. எரிகோவின் கிட்ட இருக்கும், யோர்தானுக்கு இக்கரையிலே மோவாபின் சமனான வெளிகளில் பாளயமிறங்கியவர்கள் யார்?

   a. இஸ்ரவேலர் b. மீதியானியர் c. அமலேக்கியர் d. கானானியர்

3. பூமியின் விசாலத்தை மூடுகிற ஜனக்கூட்டம் எது?

   a. எகிப்தியர் b. பெரீசியர் c. இஸ்ரவேலர் d. ஏத்தியர்

4. பிலேயாம் யாரை சபிப்பதை தேவன் அனுமதிக்கவில்லை?

   a. பாபிலோனியரை b. எமோரியரை c. கானானியரை d. இஸ்ரவேலரை

5. பிலேயாமின் வழி மாறுபாடாயிருந்ததினால் அவனுக்கு எதிராளியாக வந்தவர் யார்?

   a.கர்த்தர் b. கர்த்தருடைய தூதன் c. மோவாபின் இராஜா d. இஸ்ரவேலின் இராஜா

6. பிலேயாமுக்கு எதிராளியாக வந்த கர்த்தருடைய தூதன் எதை தன் கையில் பிடித்திருந்தார்?

   a. தீவட்டி b. ஈட்டி c. உருவின பட்டயம் d. சுடரொளி பட்டயம்

7. பிலேயாம் கழுதையை அடிக்க எதை உபயோகப்படுத்தினான்?

   a. தடி b. கோல் c. சவுக்கு d. சாட்டை

8. மாறுபாடான வழியில் நடந்த தீர்க்கதரிசியிடம் பேசிய மிருகம் ஏது?

   a. ஒட்டகம் b. மாடு c. குதிரை d. கழுதை

9. கழுதையின் வாயைத் திறந்தவர் யார்?

   a. மோசே b. எலிசா c. கர்த்தர் d. கர்த்தருடைய தூதன்

10. கர்த்தருடைய தூதனைக் கண்ட கழுதை எத்தனை தரம் விலகி நின்றது?

    a. ஒன்று b. இரண்டு c. மூன்று d. நான்கு

11. பிலேயாம் கோபமூண்டவனாகி கழுதையை எத்தனை முறை அடித்தான்?

    a. ஒன்று b. இரண்டு c. மூன்று d. நான்கு

<u>விடைகள்</u>

1.	b (எண். 22:32)	5.	b (எண் 22:22)	9.	c (எண் 22:28)
2.	a (எண் 22:1)	6	c (எண் 22:23)	10.	c (எண். 22:33)
3.	c (எண் 22:11)	7.	a (எண் 22:27)	11.	c (எண் 22:28)
4.	d (எண் 22:12)	8.	d (எண் 22:28)		

V. <u>யார், யாரிடம் கூறியது:</u> (2 Marks)

1. "மாடு வெளியின் புல்லை மேய்கிறது போல. இப்பொழுது இந்தக் கூட்டம் நம்மைச் சுற்றியிருக்கிற யாவையும் மேய்ந்து போடும்" (எண் 22:4)

   யார் : பாலாக்

   யாரிடம் : மீதியானரின் மூப்பரை நோக்கி

2. **"நீர் வந்து. எனக்காக அந்த ஜனத்தைச் சபிக்க வேண்டும்"** (எண் 22:5.6)

யார் : பாலாக்
யாரிடம் : ஸ்தானாபதிகள் மூலம் பிலேயாமிடம்

3. **"உன்னிடத்திலிருக்கிற இந்த மனிதர் யார்?"** (எண் 22:9)

யார் : தேவன்
யாரிடம் : பிலேயாமிடம்

4. **"பூமியின் விசாலத்தை மூடுகிற ஒரு ஜனக்கூட்டம் எகிப்திலிருந்து வந்திருக்கிறது"** (எண் 22:11)

யார் : பிலேயாம்
யாரிடம் : தேவனிடம்

5. **"நீ அவர்களோடே போக வேண்டாம்"** (எண் 22:12)

யார் : தேவன்
யாரிடம் : பிலேயாமிடம்

6. **"அந்த ஜனங்களைச் சபிக்கவும் வேண்டாம்"** (எண் 22:12)

யார் : தேவன்
யாரிடம் : பிலேயாமிடம்

7. **"நான் உங்களோடேகூட வருகிறதற்குக் கர்த்தர் எனக்கு உத்தரவு கொடுக்கமாட்டோம் என்கிறார்"** (எண் 22:13)

யார் : பிலேயாம்
யாரிடம் : பாலாக்கின் பிரபுக்களிடம்

8. **"நீர் என்னிடத்தில் வருகிறதற்குத் தடைபடவேண்டாம்"** (எண் 22:16)

யார் : பாலாக்கின் கனவான்களான பிரபுக்கள் பாலாக் கூறியதாக சொன்னது
யாரிடம் : பிலேயாமிடம்

9. **"உம்மை மிகவும் கனம்பண்ணுவேன்; நீர் சொல்வதையெல்லாம் செய்வேன்;"** (எண் 22:17)

யார் : பாலாக்கின் ஊழியக்காரர் பாலாக் கூறியதாக சொன்னது
யாரிடம் : பிலேயாமிடம்

10. **"என் தேவனாகிய கர்த்தரின் கட்டளையை நான் மீறக்கூடாது"** (எண் 22:18)

யார் : பிலேயாம்
யாரிடம் : பாலாக்கின் ஊழியக்காரரிடம்

11. **"நீங்களும் இந்த இராத்திரி இங்கே தங்கியிருங்கள்"** (எண் 22:19)

யார் : பிலேயாம்
யாரிடம் : பாலாக்கின் ஊழியக்காரரிடம்

12. **"நீ எழுந்து அவர்களோடே கூடப்போ"** (எண் 22:20)

யார் : தேவன்
யாரிடம் : பிலேயாமிடம்

13. **"நீ என்னைப் பரியாசம் பண்ணிக் கொண்டு வருகிறாய்"** (எண் 22:29)

யார் : பிலேயாம்
யாரிடம் : கழுதையிடம்

14. **"என் கையில் ஒரு பட்டயம் மாத்திரம் இருந்தால், இப்பொழுதே உன்னைக்கொன்று போடுவேன்"**(எண்22:29)

யார் : பிலேயாம்
யாரிடம் : கழுதையிடம்

15. **"இப்படி உமக்கு எப்போதாகிலும் நான் செய்தது உண்டா"** (எண் 22:30)

யார் : கழுதை
யாரிடம் : பிலேயாமிடம்

16. **"நான் உன்க்கு எதிரியாகப் புறப்பட்டு வந்தேன்"** (எண் 22:32)

யார் : கர்த்தருடைய தூதன்
யாரிடம் : பிலேயாமிடம்

17. **"வழியிலே நீர் எனக்கு எதிராக நிற்கிறதை அறியாதிருந்தேன்"** (எண் 22:34)

யார் : பிலேயாம்
யாரிடம் : கர்த்தருடைய தூதனிடம்

VI. <u>ஒரிரு வாக்கியங்களில் விடையளி</u>: (2 Marks)

1. **இஸ்ரவேலர் எதற்கு அருகிலுள்ள எந்த சமனான வெளிகளில் பாளயமிறங்கினார்கள்?**

இஸ்ரவேலர் எரிகோவிற்கு அருகிலுள்ள மோவாபின் சமனான வெளிகளில் பாளயமிறங்கினார்கள். (எண் 22:1)

2. **மோவாபின் ராஜா யார்? அவனுடைய தகப்பன் யார்?**

மோவாபின் ராஜா பாலாக் ராஜா. அவனுடைய தகப்பன் சிப்போர். (எண் 22:2)

3. **பாலாக் ராஜா இஸ்ரவேல் ஜனத்தைக் குறித்து மீதியானின் மூப்பரிடம் கூறியது என்ன?**

மாடு வெளியின் புல்லை மேய்கிறது போல, இப்பொழுது இந்தக் கூட்டம் நம்மைச் சுற்றியிருக்கிற யாவையும் மேய்ந்து போடும் என்று பாலாக் ராஜா இஸ்ரவேல் ஜனத்தைக் குறித்து கூறினான். (எண் 22:4)

4. **தேவனுடைய சித்தத்திற்கு மாறுபாடான காரியத்தைச் செய்யும்படி போன தீர்க்கதரிசி யார்? அவனை அழைத்தனுப்பிய இராஜா யார்?**

பிலேயாம் தீர்க்கதரிசி தேவனுடைய சித்தத்திற்கு மாறுபாடான காரியத்தைச் செய்யும்படி போனான். பாலாக் ராஜா அவனை அழைத்தனுப்பினான். (எண் 22:7,22)

5. **குறிசொல்லுதலுக்குரிய கூலியை எடுத்துக் கொண்டு பிலேயாமை சந்திக்க சென்ற மூப்பர்கள் யார்?**

மோவாபின் மூப்பரும், மீதியானின் மூப்பரும் குறி சொல்லுதலுக்குரிய கூலியை எடுத்துக் கொண்டு பிலேயாமை சந்திக்க சென்றார்கள். (எண் 22:7)

6. **நீ வந்து எனக்காக இஸ்ரவேலரை சபிக்க வேண்டும் என்று பாலாக் சொல்லி அனுப்பின வார்த்தைகளை பிலேயாம் தேவனிடம் கூறிய போது, தேவன் பிலேயாமுக்கு கொடுத்த மறு உத்தரவு என்ன?**

தேவன் பிலேயாமை நோக்கி, ''நீ அவர்களோடே போக வேண்டாம். அந்த ஜனங்களைச் சபிக்கவும் வேண்டாம், அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்'' என்றார். (எண் 22:12)

7. **பிலேயாம் இஸ்ரவேல் ஜனங்களை சபிப்பதற்கு கைமாறாக, தான் என்ன தருவதாக பாலாக் ராஜா கூறி அனுப்பினான்?**

பாலாக் ராஜா, பிலேயாம் இஸ்ரவேல் ஜனங்களை சபித்தால், அதற்கு கைமாறாக அவனை மிகவும் கனம் பண்ணுவதாகவும், அவன் சொல்வதையெல்லாம் செய்வதாகவும் கூறி அனுப்பினான். (எண்22:17)

8. **பிலேயாமின் கழுதை வழியை விட்டு வயலில் போக காரணம் என்ன? அதை வழியில் திருப்ப பிலேயாம் என்ன செய்தான்?**

கர்த்தருடைய தூதனானவர் உருவின பட்டயத்தைத் தம்முடைய கையிலே பிடித்துக் கொண்டு வழியிலே நிற்கிறதைக் கழுதை கண்டு, வழியை விட்டு வயலில் போய் நின்றது. கழுதையை வழியிலே திருப்ப பிலேயாம் அதை அடித்தான். (எண் 22:23)

9. **கழுதையின் வாயை திறந்தது யார்? கழுதையைக் கொன்று போடுவேன் என்றது யார்?**

கழுதையின் வாயை கர்த்தர் திறந்தார்.
பிலேயாம் கழுதையைக் கொன்று போடுவேன் என்றான். (எண் 22:28,29)

10. **பிலேயாமின் கண்களை திறந்தது யார்? அப்பொழுது அவன் யாரைக் கண்டான்?**

பிலேயாமின் கண்களை கர்த்தர் திறந்தார்.
அப்பொழுது அவன் கர்த்தருடைய தூதனைக் கண்டான். (எண் 22:31)

11. **கர்த்தருடைய தூதன் யாரைக் கொன்று போட்டு யாரை உயிரோடே வைப்பேன் என்றார்?**

கர்த்தருடைய தூதன் பிலேயாமைக் கொன்று போட்டு, கழுதையை உயிரோடே வைப்பேன் என்றார்.(எண்22:33)

12. **பிலோயாமை மோவாபின் பிரபுக்களோடே போக அனுமதித்த போது கர்த்தர் கொடுத்த நிபந்தனை என்ன?**

பிலேயாமை மோவாபின் பிரபுக்களோடே போக அனுமதித்த போது, கர்த்தர் அவனிடம், ''அந்த மனிதரோடே கூடப்போ, நான் உன்னோடே சொல்லும் வார்த்தையை மாத்திரம் நீ சொல்லக் கடவாய்'' என்றார். (எண் 22:35)

VII. <u>சுருக்கமான விடையளி</u>: (4 Marks)

1. **பாலாக் ராஜா இஸ்ரவேல் ஜனங்களை சபிக்கும்படியாக, பிலேயாம் தீர்க்கதரிசியை அழைக்கக் காரணம் என்ன?**

பாலாக் ராஜா பிலேயாமிடம் "எகிப்திலிருந்து ஒரு ஜனக்கூட்டம் வந்திருக்கிறது. அவர்கள் பூமியின் விசாலத்தை மூடி, எனக்கு எதிரே இறங்கியிருக்கிறார்கள். அவர்கள் என்னிலும் பலவான்கள், ஆகிலும் நீர் ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன், நீர் சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்று அறிவேன். ஆதலால் நீர் வந்து எனக்காக இந்த ஜனத்தை சபிக்க வேண்டும்" என்றான். (எண் 22:5,6)

2. **பிலேயாமிற்கும் கழுதைக்குமிடையே நடந்த சம்பாஷணையை எழுது,**

கழுதை கர்த்தருடைய தூதனைக் கண்டு பிலேயாமின் கீழ்ப்படுத்துக்கொண்டது. பிலேயாம் கோபம்மூண்டவனாகி கழுதையைத் தடியினால் அடித்தான். உடனே கர்த்தர் கழுதையின் வாயைத்திறந்தார். அது பிலேயாமைப் பார்த்து; நீர் என்னை இப்பொழுது மூன்று தரம் அடிக்கும்படி நான் உமக்கு என்ன செய்தேன் என்றது. அப்பொழுது பிலேயாம் கழுதையைப் பார்த்து; நீ என்னை பரியாசம் பண்ணிக்கொண்டு வருகிறாய்; என் கையில் ஒரு பட்டயம்மாத்திரம் இருந்தால், இப்பொழுதே உன்னைக் கொன்றுபோடுவேன் என்றான். கழுதை பிலேயாமை நோக்கி: நீர் என்னை கைக்கொண்ட காலமுதல் இந்நாள்வரைக்கும் நீர் ஏறின கழுதை நான் அல்லவா? இப்படி உமக்கு எப்போதாகிலும் நான் செய்தது உண்டா என்றது. அதற்கு அவன் இல்லை என்றான். (எண் 22:27-30)

3. *பிலேயாம் கழுதையை மூன்றுதரம் அடிக்கக் காரணம் யாது?*

i. *கர்த்தருடைய தூதனானவர் உருவின பட்டயத்தைத் தம்முடைய கையிலே பிடித்துக்கொண்டு நிற்கிறதைக் கழுதை கண்டு வழியை விட்டு விலகி வயலிலே போயிற்று. கழுதையை வழியில் திருப்ப பிலேயாம் அதை அடித்தான்.*

ii. *கர்த்தருடைய தூதனானவர் இரு புறத்திலும் சுவர் வைத்திருக்கிற திராட்சதோட்டங்களின் பாதையிலே போய் நின்றதை கழுதை கண்டு, சுவர் ஓரமாய் ஒதுங்கி பிலேயாமின் காலை சுவரோடே நெருக்கிற்று, திரும்பவும் அதை அடித்தான்.*

iii. *கழுதை கர்த்தருடைய தூதனைக் கண்டு, பிலேயாமின் கீழ்ப்படுத்துக்கொண்டது, பிலேயாம் கோபம் மூண்டவனாகி மூன்றாம் முறையாக அதை அடித்தான்.(எண்22:23-27)*

4. ***கர்த்தர் பிலேயாமின் கண்களை திறந்த போது, பிலேயாம் செய்தது என்ன?***

i. *கர்த்தர் பிலேயாமின் கண்களைத் திறந்த போது, அவன் வழியிலே நின்று உருவின பட்டயத்தைத் தம்முடைய கையிலே பிடித்திருக்கிற கர்த்தருடைய தூதனை கண்டு, தலைகுனிந்து முகங்குப்புற விழுந்து பணிந்தான்.*

ii. *பின்பு அவன் கர்த்தருடைய தூதனை நோக்கி; நான் பாவஞ்செய்தேன்; வழியிலே நீர் எனக்கு எதிராக நிற்கிறதை அறியாதிருந்தேன், இப்பொழுது உமது பார்வைக்கு இது தகாததாய் இருக்குமானால், நான் திரும்பி போய் விடுகிறேன் என்றான். (எண் 22:31,34)*

5. ***கர்த்தருடைய தூதனானவர் பிலேயாமுக்கு அவனுடைய குற்றத்தை உணர்த்தி கூறிய வார்த்தைகளை எழுது,***

கர்த்தருடைய தூதனானவர் பிலேயாமை நோக்கி, ''நீ உன் கழுதையை இதனோடே மூன்று தரம் அடித்ததென்ன? உன் வழி எனக்கு மாறுபாடாயிருக்கிறதினால், நான் உனக்கு எதிரியாகப் புறப்பட்டு வந்தேன். கழுதை என்னைக் கண்டு, இந்த மூன்று தரம் எனக்கு விலகிற்று, எனக்கு விலகாமல் இருந்ததானால், இப்பொழுது நான் உன்னைக் கொன்றுபோட்டு, கழுதையை உயிரோடே வைப்பேன்'' என்றார். (எண் 22:32,33)

VIII. போதனை: (2 Marks)

பண ஆசையினாலோ, உலகப் பிரகாரமான கனத்தையும் மகிமையையும் விரும்புவதினாலோ, நாம் தேவசித்தத்திற்கு விரோதமாகச் செல்லக்கூடாது..

❖❖❖❖❖❖❖❖

ராகாப்

(யோசுவா 1 : 1, 2 ; 2 ; 6:22-25)

I. மனப்பாட வசனம்: (2 Marks)

மத்தேயு 10 : 42

சீஷன் என்னும் நாமத்தினிமித்தம்; இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

II. பொருத்துக: (1 Mark)

1. யோசுவா	-	நூனின் குமாரன்	(யோசுவா 2:1)
2. வேவுகாரர்	-	சணல் தட்டைகள்	(யோசுவா 2:1,6)
3. எமோரியரின் ராஜா	-	சீகோன்	(யோசுவா 2:10)
4. எமோரியரின் ராஜா	-	ஓகு	(யோசுவா 2:10)
5. ராகாபின் வீடு	-	அலங்கத்தின் மதில்	(யோசுவா 2:15)
6. ஜன்னல்	-	சிவப்பு நூல் கயிறு	(யோசுவா 2:17)

III. கோடிட்ட இடங்களை நிரப்புக: (1 Mark)

1. யோசுவா _____ குமாரன்.
2. எரிகோ பட்டணத்தை வேவு பார்க்கும்படி யோசுவா _____ வேவுகாரரை அனுப்பினான்.
3. எரிகோவை வேவுபார்க்கும்படி யோசுவா _____மனுஷரை அனுப்பினான்.
4. வேவுகாரர் போய் _____என்னும் வேசியின் வீட்டில் தங்கினார்கள்.
5. ராகாப் வேவுகாரரை தன் வீட்டின்மேல் பரப்பப்பட்ட _____ மறைத்து வைத்தாள்.
6. கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்பாக _____சமுத்திரத்தின் தண்ணீரை வற்றிப்போகப் பண்ணினார்.

விடைகள்

1. நூனின்	(யோசுவா 2:1)	4. ராகாப்	(யோசுவா 2:1)
2. சித்தீமிலிருந்து	(யோசுவா 2:1)	5. சணல் தட்டைகளுக்குள்ளே	(யோசுவா 2:6)
3 இரண்டு	(யோசுவா 2:1)	6. சிவந்த	(யோசுவா 2:10)

IV. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுது: (1 Mark)

1. யோசுவா எரிகோவை வேவுபார்க்க எத்தனை மனிதரை அனுப்பினான்?
   a. ஒன்று b. இரண்டு c. மூன்று d. நான்கு

2. யோசுவா எந்த பட்டணத்தை வேவுபார்க்க இரண்டு மனிதரை அனுப்பினான்?
   a. ஆயி b. நினிவே c. எரிகோ d. எருசலேம்

3. எரிகோ பட்டணத்தாரின் இருதயம் இஸ்ரவேலரைக் குறித்து கேள்விப்பட்டபோது என்னவாயிற்று?
   a. கரைந்து போயிற்று b. சோர்ந்து போயிற்று
   c. கலங்கிப்போயிற்று d. தைரியமடைந்தது

4. ராகாபின் வீடு எங்கிருந்தது?

a. அலங்கத்தின் கீழ் *b. அலங்கத்தின் பக்கத்தில்*
c. அலங்கத்தின் எதிரில் *d. அலங்கத்தின் மதிலில்*

5. எரிகோவை வேவுபார்க்க சென்றவர்கள் மலையில் எத்தனை நாட்கள் ஒளிந்திருந்தார்கள்?

a. ஒரு நாள் *b. மூன்று நாட்கள்* *c. ஏழு நாட்கள்* *d. பத்து நாட்கள்*

6. ராகாப் எந்த நூல் கயிற்றை ஜன்னலில் கட்டி வைத்தாள்?

a. மெல்லிய பஞ்சு நூல் *b. சிவப்பு நூல்* *c. இளநீல நூல்* *d. இரத்தாம்பர நூல்*

7. எரிகோவை யோசுவா சுட்டெரித்த பின்பு ராகாப் யாருடைய நடுவிலே குடியிருந்தாள்?

a. இஸ்ரவேலர் *b. பாபிலோனியர்* *c. மோவாபியர்* *d. அசீரியர்*

விடைகள்

1 . b (யோசுவா 2:1) *4. d (யோசுவா 2:15)* *6. b (யோசுவா 2:17)*
2 c (யோசுவா 2:1) *5. b (யோசுவா 2:16)* *7. a (யோசுவா 6:25)*
3. a (யோசுவா 2:11)

V. *யார், யாரிடம் கூறியது:* (2 Marks)

1. **"**நீங்கள் போய் தேசத்தையும், எரிகோவையும் பார்த்து வாருங்கள்**"** (யோசுவா 2:1)

யார் : யோசுவா
யாரிடம் : வேவுகாரரிடம்

2. "அவர்கள் தேசத்தையெல்லாம் வேவுபார்க்கும்படி வந்தார்கள்" (யோசுவா 2:3)

யார் : எரிகோவின் ராஜா தன் ஆட்கள் மூலம் கூறிய வார்த்தைகள்
யாரிடம் : ராகாபிடம்

3. "அவர்கள் எங்கே போனார்களோ எனக்குத் தெரியாது" (யோசுவா 2:5)

யார் : ராகாப்
யாரிடம் : எரிகோ ராஜா அனுப்பிய ஆட்களிடம்

4. "உங்களாலே எல்லாருடைய தைரியமும் அற்றுப்போயிற்று" (யோசுவா 2:11)

யார் : ராகாப்
யாரிடம் : வேவுகாரரிடம்

5. "உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும், கீழே பூமியிலும் தேவனானவர்" (யோசு 2:11)

யார் : ராகாப்
யாரிடம் : வேவுகாரரிடம்

6. "எங்கள் ஜீவனே உங்கள் ஜீவனுக்கு ஈடு" (யோசுவா 2:14)

யார் : வேவுகாரர்
யாரிடம் : ராகாபிடம்

7. "இல்லாவிட்டால் நீ எங்கள் கையில் வாங்கின ஆணைக்கு நீங்கலாயிருப்போம்" (யோசுவா2:18)

யார் : வேவுகாரர்
யாரிடம் : ராகாபிடம்

8. "உங்கள் வார்த்தையின்படியே ஆகக்கடவது" (யோசுவா 2:21)

யார் : ராகாப்

யாரிடம் : வேவுகாரரிடம்

9. "கர்த்தர் தேசத்தையெல்லாம் நம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தார்" (யோசுவா 2:24)

யார் : வேவுகாரர்

யாரிடம் : யோசுவாவிடம்

VI. <u>ஓரிரு வார்த்தைகளில் விடையளி</u>: (2 Marks)

1. மோசேயின் மரணத்திற்குப் பின்னர் இஸ்ரவேல் புத்திரரின் நடத்திப்புக்காரணாய் இருந்தது யார்?அவர் யாருடைய குமாரன்?

மோசேயின் மரணத்திற்குப்பின் யோசுவா இஸ்ரவேல் புத்திரரின் நடத்திப்புக்காரணானான். அவன் நூனின் குமாரன்.(யோசுவா 1:1)

2. இஸ்ரவேலர் யோர்தானை கடக்கும் முன்பு எங்கு பாளயமிறங்கினார்கள்? எரிகோவை வேவு பார்க்க வேவுகாரர்களை அனுப்பியது யார்?

இஸ்ரவேலர் யோர்தானை கடக்கும் முன்பு சித்தீமில் பாளயமிறங்கினார்கள். எரிகோவை வேவுபார்க்க யோசுவா வேவுக்காரர்களை அனுப்பினான். (யோசுவா 2:1)

3. வேவுகாரர் யாருடைய வீட்டில் தங்கினார்கள்? அவளுடைய வீடு எங்கிருந்தது?

வேவுகாரர்கள் ராகாபின் வீட்டில் தங்கினார்கள்.
அவளுடைய வீடு அலங்கத்தின் மதிலில் இருந்தது. (யோசுவா 2:1,15)

4. எரிகோவை வேவுபார்க்கும்படி சில மனுஷர் வந்திருக்கிறார்கள் என்று யாருக்கு சொல்லப்பட்டது? அவர்களை பிடிக்கும்படி யார் வீட்டிற்கு ஆள் அனுப்பப்பட்டது?

எரிகோவை வேவுபார்க்கும்படி சில மனுஷர் வந்திருக்கிறார்கள் என்று எரிகோவின் ராஜாவுக்கு சொல்லப்பட்டது. அவர்களை பிடிக்கும்படி ராகாபின் வீட்டிற்கு ஆள் அனுப்பப்பட்டது. (யோசுவா 2:2,3)

5. ராகாப் வேவுகாரர்களை எங்கு மறைத்து வைத்திருந்தாள்? அவர்கள் மலையிலே எத்தனை நாட்கள் ஒளிந்திருந்தார்கள்?

ராகாப் வேவுகாரர்களை சணல் தட்டைகளுக்குள்ளே மறைத்து வைத்திருந்தாள்.
அவர்கள் மலையிலே மூன்று நாட்கள் ஒளிந்திருந்தார்கள். (யோசுவா 2:6,16)

6. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைக் குறித்து ராகாப் கூறியது என்ன?

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைக் குறித்து, அவரே உயர வானத்திலும், கீழே பூமியிலும் தேவனானவர் என்று ராகாப் கூறினாள். (யோசுவா 2:11)

7. ராகாப் வேவுகாரரிடம் கர்த்தர் பேரில் தனக்கு ஆணையிட்டுக் கொடுக்கும்படி வேண்டிக்கொண்டது என்ன?

ராகாப் வேவுகாரரிடம், "நான் உங்களுக்கு தயவு செய்தபடியினால் நீங்களும் என் தகப்பன் குடும்பத்துக்குத் தயவு செய்வோம் என்று கர்த்தர் பேரில் ஆணையிட்டுக்கொடுங்கள்" என்று வேண்டிக் கொண்டாள். (யோசுவா 2:12)

8. ராகாப் வேவுகாரர்களை எதன் வழியாக எப்படி இறக்கி விட்டாள்?

ராகாப் வேவுகாரர்களை ஜன்னல் வழியாக கயிற்றினாலே இறக்கி விட்டாள். (யோசு 2:15)

9. எரிகோவிலிருந்து திரும்பி வந்த வேவுகாரர் யோசுவாவிடம் என்ன சொன்னார்கள்?

எரிகோவிலிருந்து திரும்பி வந்த வேவுகாரர் யோசுவாவிடம், கர்த்தர் தேசத்தையெல்லாம் நம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தார் என்றும் தேசத்தின் குடிகளெல்லாம் நமக்கு முன்பாகச் சோர்ந்து போனார்கள் என்றும் சொன்னார்கள். (யோசுவா 2:24)

10. எரிகோ பட்டணத்தில் வாசம் பண்ணின யாரை மாத்திரம் யோசுவா உயிரோடே வைத்தான்?

யோசுவா ராகாபையும், அவள் தகப்பன் வீட்டாரையும் அவளுக்குள்ள யாவையும் உயிரோடே வைத்தான்.(யோசுவா 6:25)

11. ராகாப் வேவுகாரரை மறைத்து வைத்தபடியால் யோசுவா அவளுக்கு என்ன கைமாறு செய்தான்?

ராகாபையும் அவள் தகப்பன் வீட்டாரையும், அவளுக்குள்ள யாவையும் கொன்று போடாமல் உயிரோடே பாதுகாத்தான். ராகாபை இஸ்ரவேலின் நடுவிலே குடியிருக்கும்படி செய்தான். (யோசுவா 6:25)

VII. <u>விரிவான விடையளி:</u> (4 Marks)

1. வேவுகாரரை வெளியே கொண்டு வரும்படி சொன்ன ராஜாவின் மனுஷரிடம் ராகாப் கொடுத்த பதில் என்ன?

ராகாப், ராஜாவின் மனுஷரிடம்; "வேவுகாரர்கள் என்னிடத்தில் வந்தது மெய்தான், ஆனாலும் அவர்கள் எவ்விடத்தாரோ எனக்குத் தெரியாது. வாசலை அடைக்கும் நேரத்தில் இருட்டு வேளையிலே. அந்த மனுஷர் புறப்பட்டுப் போய்விட்டார்கள். அவர்கள் எங்கே போனார்களோ எனக்குத் தெரியாது. அவர்களைச் சீக்கிரமாய் போய்த் தேடுங்கள் நீங்கள் அவர்களைப் பிடித்துக் கொள்ளலாம்" என்று கூறினாள். (யோசுவா 2:4,5)

2. ராகாப் வேவுகாரரை ராஜாவின் மனுஷரிடத்திலிருந்து எவ்வாறு பாதுகாத்தாள்?

ராஜாவின் மனுஷர் வேவுகாரர்களை தேடிவந்தபோது ராகாப் வேவுகாரர்களை வீட்டின் மேல் ஏறப்பண்ணி, வீட்டின் மேல் பரப்பப்பட்ட சணல் தட்டைகளுக்குள்ளே மறைத்து வைத்தாள். மேலும், ராஜாவின் மனுஷர் கையில் அவர்கள் அகப்படாதபடிக்கு அருகிலுள்ள மலைக்கு போய் மூன்று நாள் ஒளிந்திருந்து பின்பு உங்கள் வழியே போங்கள் என்று அவர்களுக்கு ஆலோசனை கூறினாள்.

அதன்பின், கயிற்றினாலே அலங்கத்தின் மதிலில் இருந்த தன் வீட்டின் ஜன்னல் வழியாக அவர்களை இறக்கி விட்டாள். இவ்வாறாக ராஜாவின் மனுஷர் கையிலிருந்து வேவுகாரர்களை பாதுகாத்தாள். (யோசுவா 2:6,15,16)

3. எரிகோ பட்டணத்தாரின் இருதயம் கரைந்து போவதற்கும், திகில் உண்டாவதற்கும், தைரியம் அற்றுப்போவதற்கும் காரணமாயிருந்தவைகள் எவை என்று ராகாப் வேவுகாரரிடம் கூறினாள்?

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகச் சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரை வற்றிப்போகப் பண்ணினார் என்பதையும் எமோரியரின் இரண்டு ராஜாக்களாகிய சீகோனுக்கும், ஓகுக்கும் செய்ததையும், கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தேசத்தை ஒப்புக் கொடுத்தார் என்பதையும் கேள்விப்பட்ட போது எரிகோ பட்டணத்தாரின் இருதயம் கரைந்து போயிற்று என்று ராகாப் வேவுகாரரிடம் கூறினாள். (யோசுவா 2:9,10)

4. ராகாப் தன்னையும், தன் குடும்பத்தாரையும் உயிரோடே காப்பாற்றும்படி வேண்டிக் கொண்டபோது வேவுகாரர் அவளுக்கு கொடுத்த மறுமொழி என்ன?

வேவுகாரர் ராகாபை நோக்கி, "எங்கள் ஜீவனே உங்கள் ஜீவனுக்கு ஈடு; நீங்கள் எங்கள் காரியத்தை வெளிப்படுத்தாதிருந்தால், கர்த்தர் எங்களுக்குத் தேசத்தைக் கொடுக்கும்போது, நாங்கள் தயையும், சத்தியமும் பாராட்டுவோம்", என்று அவளுக்கு மறுமொழி கொடுத்தார்கள். (யோசுவா 2:14)

5. ராகாபும், அவள் குடும்பத்தாரும் பாதுகாக்கப்படும்படியாக வேவுகாரர்கள் அவளுக்கு கட்டளையாக கொடுத்த நிபந்தனைகள் யாவை?

யுத்தத்திற்காக இஸ்ரவேல் புத்திரரோடுகூட வேவுகாரர் தேசத்துக்குள் பிரவேசிக்கும்போது ராகாப் சிவப்புநூல் கயிற்றை அவர்களை இறக்கிவிட்ட ஜன்னலிலே கட்டி வைத்திருக்கவேண்டும்.

அவள் தகப்பனையும், தாயையும், சகோதரர்களையும் அவள் தகப்பன் குடும்பத்தார் அனைவரையும் அவளிடத்தில் அவள் வீட்டிலே சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும்.

வேவுகாரரின் காரியத்தை அவளும், அவள் தகப்பன் வீட்டாரும் யாருக்கும் வெளிப்படுத்தக்கூடாது என்ற நிபந்தனைகளை வேவுகாரர்கள் அவளுக்கு கட்டளையாக கொடுத்தார்கள். (யோசுவா 2:17,20)

6. இஸ்ரவேலர் எரிகோவை கைப்பற்றிய போது ராகாபும் அவள் குடும்பத்தாரும் எவ்வாறு பாதுகாக்கப்பட்டனர்?

யோசுவா, தேசத்தை வேவுபார்த்த இரண்டு புருஷரை நோக்கி, "நீங்கள் அந்த வேசியின் வீட்டிலே போய், நீங்கள் அவளுக்கு ஆணையிட்டபடி, அந்த ஸ்திரீயையும் அவளுக்கு உண்டான யாவையும் அங்கேயிருந்து வெளியே கொண்டு வாருங்கள்" என்றான்.

அப்பொழுது வேவுகாரரான அந்த வாலிபர் உள்ளே போய், ராகாபையும் அவள் தகப்பனையும், அவள் தாயையும், சகோதரர்களையும் அவளுக்குள்ள யாவையும் அவள் குடும்பத்தார் அனைவரையும் வெளியே அழைத்துக் கொண்டு வந்து இஸ்ரவேலரின் பாளயத்துக்குப் புறம்பே இருக்கும்படி பண்ணினார்கள். இவ்வாறாக ராகாபும் அவள் குடும்பத்தாரும் பாதுகாக்கப்பட்டாகள். (யோசுவா 6:22,23)

7. இஸ்ரவேலர் எரிகோவை பிடித்த போது அதற்கு என்ன செய்தார்கள்?

இஸ்ரவேலர் எரிகோவை பிடித்தபோது பட்டணத்திலிருந்த புருஷரையும், ஸ்திரீகளையும், வாலிபரையும், கிழவரையும் ஆடுமாடுகளையும், கழுதைகளையும் சகலத்தையும் பட்டயக்கருக்கினால் சங்காரம் பண்ணினார்கள். பட்டணத்தையும், அதிலுள்ள யாவையும் அக்கினியால் சுட்டெரித்தார்கள். வெள்ளியையும், பொன்னையும், வெண்கலத்தினாலும், இரும்பினாலும் செய்த பாத்திரங்களைமாத்திரம் கர்த்தரின் ஆலயப் பொக்கிஷத்தில் சேர்த்தார்கள். (யோசுவா 6:21,24)

VIII. <u>போதனை</u>: (2 Marks)

நாம் தேவனுடைய ஜனங்களுக்கு உதவி செய்வோமாயின் நமக்கு நிச்சயமாகவே பிரதிபலன் அருளப்படும்.

❖❖❖❖❖❖❖❖❖

இஸ்ரவேலர் யோர்தானைக் கடந்தது

(யோசுவா 3 , 4)

I. <u>மனப்பாட வசனம்</u> **:** (2 Marks)

<u>2 தீமோத்தேயு : 2 : 10</u>
ஆகையால், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக் கொள்ளும்படி, சகலத்தையும் அவர்கள் நிமித்தமாகச் சகிக்கிறேன்.

II. <u>பொருத்துக :</u> (1 Mark)

1.	ஆசாரியர்கள்	- உடன்படிக்கைப் பெட்டி	(யோசுவா 3 : 6)
2.	சர்வபூமிக்கும் ஆண்டவராயிருக்-கிறவருடைய உடன்படிக்கைப் பெட்டி	- யோர்தான்	(யோசுவா 3 : 11)
3.	கில்கால்	- பன்னிரண்டு கற்கள்	(யோசுவா 4 : 20)
4.	கில்கால்	- ளரிகோவுக்குக் கீழெல்லை	(யோசுவா 4 : 19)
5.	யோர்தான்	- பன்னிரண்டு கற்கள்	(யோசுவா 4 : 19)
6.	யோர்தானின் கற்கள்	- நினைப்பூட்டும் அடையாளம்	(யோசுவா 4 : 7)

III. <u>கோடிட்ட இடங்களை நிரப்புக :</u> (1 Mark)

1. இஸ்ரவேலர் யோர்தானைக் கடக்கும் முன்பு _____ என்னுமிடத்தில் பாளயமிறங்கினார்கள்.

2. உங்களைப் _____பண்ணிக்கொள்ளுங்கள். நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார்.

3. உடன்படிக்கைப் பெட்டியை சுமக்கிற ஆசாரியர்களின் கால்கள் பட்டவுடனே கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்த _____ தண்ணீர் இரண்டாக பிரிந்து ஓடிற்று.

4. யோசுவா _____நடுவில் ஆசாரியர்களின் கால்கள் நின்ற இடத்திலே பன்னிரண்டு கற்களை நாட்டினான்.

5. கர்த்தர் _____ சகல இஸ்ரவேலரின் கண்களுக்கு முன்பாக மேன்மைபடுத்தினார் . இதனால் ஜனங்கள் மோசேக்கு பயந்திருந்தது போல, _____அவன் உயிரோடிருந்த நாளெல்லாம் பயந்திருந்தார்கள்.

6. முதல் மாதம் _____ தேதியிலே ஜனங்கள் யோர்தானிலிருந்து கரையேறினார்கள்.

7. யோர்தானின் நடுவிலிருந்து எடுக்கப்பட்ட 12 கற்களை யோசுவா _____ நாட்டினான்.

<u>விடைகள்</u>

1. சித்தீம் (யோசுவா 3 : 1)
2. பரிசுத்தம் (யோசுவா 3 : 5)
3. யோர்தானின் (யோசுவா 3 : 16)
4. யோர்தானின் (யோசுவா 4 : 9)
5. யோசுவாவை, யோசுவாவுக்கும் (யோசுவா 4 : 14)
6. பத்தாம் (யோசுவா 4 : 19)
7. கில்காலில் (யோசுவா 4 : 20)

IV. <u>*சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுது*</u>**:** (1 Mark)

1. இஸ்ரவேல் ஜனங்களுக்கும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை சுமக்கிற ஆசாரியர்களுக்கும் இடையிலே எத்தனை முழத்தூரமான இடம் இருக்க வேண்டும் என்று யோசுவா கட்டளையிட்டான்?

a) ஆயிரம் b) இரண்டாயிரம் c) மூவாயிரம் d) நான்காயிரம்

2. யோர்தான் எந்தக்காலம் முழுவதும் கரைபுரண்டு ஓடும் ?

a) குளிர்காலம் b) கோடைகாலம் c) அறுப்புக்காலம் d) மழைகாலம்

3. எத்தனை யுத்த சன்னத்தர் யுத்தம் பண்ணும்படி கர்த்தருக்கு முன்பாக எரிகோவின் சமனான வெளிகளுக்கு கடந்து போனார்கள்?

a) பத்தாயிரம் b) இருபதினாயிரம் c) முப்பதினாயிரம் d) நாற்பதினாயிரம்

4. அறுப்புக்காலம் முழுவதும் கரைபுரண்டுபோகும் யோர்தான் எதற்கு முன்பாக பிரிந்து போனது?

a) கர்த்தருக்கு b) கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக
c) யோசுவாவுக்கு d) மோசேக்கு

5. சகல ஜனங்களும் யோர்தானைக் கடந்து தீருமளவும் உடன்படிக்கைப் பெட்டியை சுமக்கிற ஆசாரியர்கள் எங்கே நின்றார்கள்?

a) யோர்தானின் கரையிலே b) யோர்தானின் நடுவிலே
c) யோர்தானின் வலப்புறத்திலே d) யோர்தானின் ஓரத்திலே

6. யோர்தானிலிருந்து எடுத்துக் கொண்டு வந்த கற்களை கில்காலிலே நாட்டியது யார்?

a) யோசுவா b) மோசே c) இஸ்ரவேல் ஜனங்கள் d) யுத்த வீரர்கள்

விடைகள்

1.	*b.*	*யோசுவா 3 : 4*	*4.*	*b.*	*யோசுவா 4 : 7*
2.	*c.*	*யோசுவா 3 : 15*	*5.*	*b.*	*யோசுவா 3 : 17*
3.	*d.*	*யோசுவா 4 : 13*	*6*	*a.*	*யோசுவா 4 : 20*

V. <u>*யார் யாரிடம் கூறியது*</u> : (2Marks)

1. "நீங்கள் நடக்கவேண்டிய வழியை அறியும்படிக்கு அதற்குச் சமீபமாய் வராதிருப்பீர்க்களாக". (யோசுவா 3 : 4)

யார் : அதிபதிகள்
யாரிடம்: ஜனங்களிடம்

2. a. "உங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள்".

b. " நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார்". (யோசுவா3 : 5)

யார் : யோசுவா
யாரிடம்: ஜனங்களிடம்

3. "இன்று அவர்கள் கண்களுக்கு முன்பாக உன்னை மேன்மைப்படுத்துவேன்.". (யோசுவா 3:7)

யார் : கர்த்தர்
யாரிடம்: யோசுவாவிடம்

4. a. "நீங்கள் இங்கே சேர்ந்து உங்கள் தேவனாகிய கர்த்தருடைய வார்த்தைகளைக் கேளுங்கள்". (யோசுவா 3 : 9)

b. " ஜீவனுள்ள தேவன் உங்கள் நடுவிலே இருக்கிறார் " (யோசுவா 3 : 10)

யார் : யோசுவா
யாரிடம்: இஸ்ரவேல் புத்திரரிடம்

5. "நீங்கள் இன்று இரவில் தங்கும் ஸ்தானத்திலே அவைகளை வையுங்கள்". (யோசுவா 4: 3)
யார் : கர்த்தர்
யாரிடம்: யோசுவாவிடம்

6. "உங்களில் ஒவ்வொருவன் ஒவ்வொரு கல்லைத் தன் தோளின்மேல் எடுத்துக் கொண்டு போங்கள்". (யோசுவா 4 : 5)
யார் : யோசுவா
யாரிடம்: இஸ்ரவேல் புத்திரரில் ஒவ்வொரு கோத்திரத்திற்கு ஒவ்வொருவராக ஆயத்தப்படுத்தியிருந்த பன்னிரண்டு பேரிடம்.

7. "இந்தக் கற்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு என்றைக்கும் நினைப்பூட்டும் அடையாளம்". (யோசுவா 4 : 7)
யார் : யோசுவா
யாரிடம்: இஸ்ரவேல் புத்திரரில் ஒவ்வொரு கோத்திரத்திற்கு ஒவ்வொருவராக ஆயத்தப்படுத்தியிருந்த பன்னிரண்டு பேரிடம்.

8. "யோர்தானிலிருந்து கரையேறி வாருங்கள்". (யோசுவா 4 : 17)
யார் : யோசுவா
யாரிடம்: ஆசாரியர்களிடம்.

VI. <u>*கருக்கமான விடையளி*</u> **:** (2 Marks)

1. உடன்படிக்கை பெட்டியை சுமந்து சென்றது யார்? அவர்களுக்கும் ஜனங்களுக்கும் இடையிலே எவ்வளவு தூரமான இடம் இருக்க வேண்டும்?

லேவியராகிய ஆசாரியர்கள் உடன்படிக்கை பெட்டியை சுமந்து சென்றார்கள். அவர்களுக்கும் ஜனங்களுக்கும் இடையிலே இரண்டாயிரம் முழத் தூரமான இடம் இருக்க வேண்டும். (யோசுவா 3 : 4)

2. இஸ்ரவேல் புத்திரர் யோர்தானைக் கடக்குமுன்பு, கர்த்தர் தங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்யும்படியாக, ஜனங்களை என்ன செய்யுமாறு யோசுவா கட்டளையிட்டான்? (அல்லது) கர்த்தர் தங்கள் நடுவிலே அற்புதங்களை செய்யும்படியாக ஜனங்கள் என்ன செய்ய வேண்டும் என்று யோசுவா கட்டளையிட்டான்?

கர்த்தர் நாளைக்கு உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார். ஆகையால் உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள் என்று யோசுவா கட்டளையிட்டான் (யோசுவா 3 : 5)

3. இஸ்ரவேலருக்கு முன்பாக யோர்தான் நதி எவ்வாறு இரண்டாக பிரிந்தது?

சர்வ பூமிக்கும் ஆண்டவராகிய கர்த்தரின் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்களின் கால்கள் தண்ணீரின் ஓரத்தில் பட்டவுடனே மேலேயிருந்து ஓடிவருகிற தண்ணீர் நின்று சார்தானுக்கடுத்த ஆதாம் ஊர் வரைக்கும் ஒரு குவியலாகக் குவிந்தது. உப்புக் கடல் என்னும் சமனான வெளியின் கடலுக்கு ஓடிவருகிற தண்ணீர் பிரிந்து ஓடிற்று. இவ்வாறு கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக யோர்தானின் தண்ணீர் பிரிந்து ஓடிற்று. (யோசுவா 3 : 14 – 16)

4. யோர்தானின் நடுவில் ஆசாரியர் நின்ற இடத்திலிருந்து 12 கற்களை எடுத்து தங்கள் தோளின் மேல் சுமந்து கொண்டு போனது யார்?

இஸ்ரவேல் புத்திரரில் ஒவ்வொரு கோத்திரத்திற்கு ஒவ்வொருவராக ஆயத்தப்படுத்தியிருந்த பன்னிரண்டு பேர் யோர்தானின் நடுவில் ஆசாரியர் நின்ற இடத்திலிருந்து 12 கற்களை எடுத்து தங்கள் தோளின் மேல் சுமந்துகொண்டு போனார்கள். (யோசுவா 4 : 4)

5. யோர்தானின் நடுவிலிருந்து எடுக்கப்பட்ட கற்கள் ஏன் இஸ்ரவேல் புத்திரருக்கு என்றென்றைக்கும் நினைப்பூட்டும் அடையாளமாக கில்காலில் வைக்கப்பட்டுள்ளது?

இஸ்ரவேல் புத்திரர் யோர்தானைக் கடந்து போகிறபோது, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக யோர்தானின் தண்ணீர் பிரிந்து போனதினால், யோர்தானின் கற்கள், அந்த சம்பவத்தை நினைப்பூட்டும் அடையாளமாக, கில்காலில் வைக்கப்பட்டிருக்கின்றன. (யோசுவா 4 : 7)

6. யோர்தானின் நடுவில் உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்த ஆசாரியரின் கால்கள் நின்ற இடத்திலே எத்தனை கற்கள் யாரால் நாட்டப்பட்டது?

பன்னிரண்டு கற்கள் நாட்டப்பட்டது. யோசுவா அவைகளை நாட்டினான் (அல்லது) அவைகள் யோசுவாவால் நாட்டப்பட்டது (யோசுவா 4 : 9)

7. இஸ்ரவேல் புத்திரர் கடந்து தீருமளவும் குவியலாக குவிந்து நின்ற யோர்தானின் தண்ணீர் எப்போது தங்களிடத்திற்குத் திரும்பி முன்போல அதின் கரையெங்கும் புரண்டது?

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர் யோர்தான் நடுவிலிருந்து ஏறி, அவர்கள் உள்ளங்கால்கள் கரையில் ஊன்றினபோது, யோர்தானின் தண்ணீர்கள் தங்களிடத்துக்குத் திரும்பி, முன்போல அதின் கரையெங்கும் புரண்டது. (யோசுவா 4 : 18)

8. யோர்தானின் நடுவிலே ஆசாரியர்களின் கால்கள் நிலையாய் நின்ற இடத்திலிருந்து எத்தனை கற்கள் எடுக்கப்பட்டன? அவைகள் எங்கு நாட்டப்பட்டன?

பன்னிரண்டு கற்கள் எடுக்கப்பட்டன. அவைகள் கில்காலில் நாட்டப்பட்டன.(யோசுவா4:20)

9. இஸ்ரவேலர் கானானுக்குள் பிரவேசித்ததுபோல நாமும் ஆவிக்குரிய கானானுக்குள் பிரவேசிக்கத் தீர்மானித்தால், கர்த்தர் நமக்காக என்ன செய்வார்?

கர்த்தர் நமக்கென்று தங்களுக்குரிய எல்லாவற்றையும் தியாகம் செய்த பிரதிஷ்டையுள்ள ஊழியக்காரரைக் எழுப்பித் தருவார். (போதனை)

10. கர்த்தர் ஏன் சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரையும் யோர்தானின் தண்ணீரையும் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக வற்றிப்போகப் பண்ணினார்?

பூமியின் சகல ஜனங்களும் கர்த்தருடைய கரம் பலத்ததென்று அறியும்படிக்கும், இஸ்ரவேல் ஜனங்கள் சகல நாளும் தங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயப்படும் படிக்கும், கர்த்தர் சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரையும் யோர்தானின் தண்ணீரையும் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக வற்றிப்போகப் பண்ணினார். (யோசுவா 4 : 23)

VII. <u>விரிவான விடையளி</u> : (4 Marks)

1. எதற்கு அடையாளமாக சர்வ பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறவருடைய உடன்படிக்கைப் பெட்டி இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக யோர்தானிலே போகிறது என்று யோசுவா கூறினான்?

ஜீவனுள்ள தேவன் அவர்கள் நடுவே இருக்கிறார் என்பதையும் அவர் கானானியரையும், ஏத்தியரையும், ஏவியரையும், பெரிசியரையும், கிர்காசியரையும், எமோரியரையும், எபூசியரையும் அவர்களுக்கு முன்பாக துரத்திவிடுவார் என்பதையும் அவர்கள் அறிந்து கொள்வதற்கு அடையாளமாக சர்வ பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறவருடைய உடன்படிக்கைப் பெட்டி அவர்களுக்கு முன்னே யோர்தானிலே போகிறது என்று யோசுவா கூறினான். (யோசுவா 3 : 10 - 11)

2. இஸ்ரவேலர் யோர்தானை எவ்வாறு கடந்து போனார்கள்? (அல்லது) இஸ்ரவேலருக்கு முன்பாக யோர்தான் நதி எவ்வாறு பிரிந்தது ?

ஜனங்கள் யோர்தானைக் கடந்து போகத் தங்கள் கூடாரங்களிலிருந்து புறப்பட்டார்கள். ஆசாரியர்கள் உடன்படிக்கைப் பெட்டியை ஜனங்களுக்கு முன்னே சுமந்து கொண்டுபோய், யோர்தான் மட்டும் வந்தார்கள். பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்களின் கால்கள் தண்ணீரின் ஓரத்தில் பட்டவுடனே மேலேயிருந்து ஓடிவருகிற தண்ணீர் நின்று சார்தானுக்கடுத்த ஆதாம் ஊர் வரைக்கும் ஒரு குவியலாகக் குவிந்தது. உப்புக் கடல் என்னும் சமனான வெளியின் கடலுக்கு ஓடிவருகிற தண்ணீர் பிரிந்து ஓடிற்று.

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை சுமக்கிற ஆசாரியர்கள் யோர்தானின் நடுவிலே தண்ணீரில்லாத தரையிலே காலூன்றி நிற்கும் போது இஸ்ரவேலரெல்லாரும் தண்ணீரற்ற உலர்ந்த தரைவழியாய்க் யோர்தானைக் கடந்து போனார்கள் (யோசுவா 3:14-17)

3. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பிள்ளைகள் கில்காலில் நாட்டப்பட்ட பன்னிரண்டு கற்களைப் பார்த்து இந்தக் கற்கள் ஏதென்று கேட்கும் போது, அவர்களுக்கு என்னறிவிக்க வேண்டும் என்று யோசுவா கட்டளையிட்டான் ?

யோசுவா இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, ''நாளை உங்கள் பிள்ளைகள் இந்தக்கற்கள் ஏதென்று கேட்கும் போது நீங்கள் இஸ்ரவேலர் வெட்டாந்தரை வழியாய் இந்த யோர்தானைக் கடந்து வந்தார்கள். பூமியின் சகல ஜனங்களும் கர்த்தருடைய கரம் பலத்ததென்று அறியும் படிக்கும், நீங்கள் சகல நாளும் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயப்படும்படிக்கும், உங்கள் தேவனாகிய கர்த்தர் சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரையும் யோர்தானின் தண்ணீரையும் நாங்கள் கடந்து தீருமட்டும் எங்களுக்கு முன்பாக வற்றிப்போகப் பண்ணினார், என்று அவர்களுக்கு அறிவிக்க வேண்டும்'' என்று கட்டளையிட்டான். (யோசுவா 4: 21 - 24)

VIII. <u>போதனை :</u> (2 Marks)

நம்மை ஆவிக்குரிய கானானுக்குள் வழிநடத்தும்படியாக, தங்களுக்குரிய எல்லாவற்றையும் தியாகம் செய்த பிரதிஷ்டையுள்ள ஊழியக்காரரைக் காத்தர் நமக்கென்று எழுப்பித் தந்திருக்கிறார்.

****